www.padippakam.com

முரசொலி

## சிங்களவர் ஏகாதிபத்திய வெறிக்கு

# தமிழ் ஈழ இளைஞர்

# 18 பேர் பலி!

## போலீசார் அடித்தே கொன்றனர்!

லண்டன், ஆக. 27—
யாழ்ப்பாணம் பகுதியில் விடுதலைப் புலிகளைக் கூண்டோடு ஒழித்துக் கட்டப் போகிறோம் என்ற பெயரில் அவசர நிலைப் பிரகடனம் செய்து— அராஜக தாண்டவமாடுகின்றனர் சிங்களவர்! அவர்கள் வெறிக்குப் பலியான தமிழ் இளைஞர்இருவர் திருஉருவங்களே நீங்கள் மேலே காணும் சடலங்கள்!

அவர்களுள் ஒருவர் கனகரத்தினம் விஸ்வஜோதி ரத்தினம். நண்பர்கள் அன்பாக அவரை 'இன்பம்' என்று அழைப்பர். வயது 27.

அடுத்தவர் அவரது மைத்துனர் சரவண முத்து செல்வரத்தினம். வயது 29.

தெற்கு நாவலப்பிட்டியைச் சார்ந்த இளைஞரேறுகள் இவர்கள்.



## தமிழர் இன்பம் பறிபோனது!

விடுதலைப் புலிகளை வேட்டையாடுகிறோம் என்ற பெயரில் 14–7–79 அன்று இரவு ஒரு மணிக்கு சிங்களப்போலீசார் இவர்கள் வீட்டுக்கு வந்தனர். இருவரையும் காரில் ஏற்றிச் சென்றனர்.

தான் காவல்துறைச் சீருடையில் காடையர்களாக வருகின்றனர்.

இவர்கள் வெறிக்கு இரையாகி மறைந்த தமிழ்க்

யில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த்துரோகி செ. ராசதுரை தமிழகம் வந்து உல்லாசப் பயணம் நடத்திக்

சாவகச்சேரி காவல் நிலையத்தில் செல்லத்துரை ராஜேஸ்வரன் சித்திரவதை செய்யப்பட்டதை, அன்றைய தினமே கைது செய்

படிப்பகம்

வந்தனர். இருவரையும் காரில் ஏற்றிச் சென்றனர்.

மறுநாள் காலை யாழ்ப்பாணம் சாலை ஒன்றின் ஓரத்தில் இவர்கள் பிணமாகக் கிடந்தனர்.

உடலெங்கும் சித்திரவதைக் காயங்கள். தீப்புண்கள். இருவர் சடலங்களையும் பார்க்கச் சகிக்கவில்லை.

இன்பம்! அழகானபெயர்! ஆனால் அவர் காவல் நிலையத்தில் பட்ட துன்பங்கள் கணக்கில்லை. சொல்லொணு சித்திரவதைகள் புரிந்தபின், சுட்டிருக்கின்றனர் அவரை நெற்றியில். கபாலம்உடைந்தது. உயிர் பிரிந்தது.

தலையில் பாய்ந்தகுண்டை அகற்றி விட்டால்— தடயம் இல்லாது போய் விடும் என்றெண்ணினர் போலும் சிங்களக் காடையர்கள். குண்டு மூளையில் பதிந்திருக்கவே, குண்டை அகற்றுகிறோம் என்ற பெயரில்மூளையையே அகற்றி விட்டனர்.

## கண்ணீர் வடியுது முத்து முத்தாய்

மைத்துனர் சரவணமுத்து செல்வமுத்து— இன்பத்தின் உடன் பிறந்தாளை மணந்தவர். வெல்டிங் தொழில் தெரிந்தவர். சிங்களக் கொடுமை தாளாமல் மதியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்று வேலை பார்க்க ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்ட நிலையில் கைதானார். இன்பம் சடலம் கிடந்த இடத்திலேயே இவர் சடலமும் கிடந்திருக்கிறது.

இவரைக் கழுத்து வழியே சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். குண்டை அகற்றுவதற்காக மூளையையும்அகற்றி விட்டனர்.

இவர்கள் இருவர் மட்டுமில்லை; யாழ்ப்பாணத்தில் 12—7—79 அன்று அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டபின், ஆகஸ்ட் 4 வரையான கணக்கின்படி— பதினேழே நாளில் சிங்களக் காடையர்களால் உற்றார் உறவினர் அறிய சிங்களக் காடையர்களாம் காவல் துறையினரால்இழுத்துச்செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் எண்ணிக்கை 147 ஆகும்.

இவர்களுள் சிறையில் வாடுவோர் பலர். சித்திரவதைக்கு இரையாகிச் செத்தோர் பலர். ''என்ன ஆயினர்?'' என்று தெரியாமலே ''தவறிப் போனோர்'' மட்டும் பதினெட்டுப் பேர்.

மதத்தால் பௌத்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிங்களக் காடையர்கள்தான் இந்தக் கொலைகளை எல்லாம் செய்கிறார்கள்! அவர்கள் இரையாகி மறைந்த தமிழ்க் கண்மணிகள் மேலும் [illegible] பற்றிய நெஞ்சு வெடிக்கும் தகவல்கள் இதோ!

## ராமலிங்கம் பாவேந்திரன்

திருமணமாகாத இளைஞர். 24 வயதுக் காளை. 14—7—79 இரவு ஒரு மணியளவில் நாவலப்பிட்டியிலேயே —புனிதவேதுரு வீதி செல்வ ரத்தினத்துடனும் கைதானார். பின்னர் இவர் சடலமும் வீதியில் கிடந்தது. சிங்களக் காவல் துறையினர் பசிக்கு இந்த இளைஞனும் பலி!

## செல்லத்துரை ராஜேஸ்வரன்

யாழ்ப்பாணம் நகர் சாத்தனார்கோவில் வீதியில் குடியிருந்தவர். கட்டிய மனைவியும் கைக்குழந்தை ஒன்றும் உண்டு. அவசரநிலைப் பிரகடனம் ஆன மறுநாள்— 13—7—79 அன்று இரவு காவலர்கள் அழைத்துச்சென்றனர். சாவகச்சேரி காவல் நிலையத்தில் வைத்துஅடித்தே கொன்றனர். சடலத்தை வீதியில் கூடப் போடவில்லை. எங்கே என்றே தெரியவில்லை.

## செல்லத்துரை பரமேஸ்வரன

ராஜேஸ்வரனின் இளவல். திருமணமானவர். மனைவி கர்ப்பிணி. செல்லத்துரை ராஜேஸ்வரனுடன் காவல் துறையினரால் சாவகச்சேரி காவல் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார். என்ன ஆனார் என்றே தெரியவில்லை. சிங்கள ஏகாதிபத்தியவெறிக்கு இவரும் இரையாகிவிட்டார் என்றே கருதப்படுகிறது.

## அய்யாத்துரை இந்திரராஜா

அவசர நிலை பிரகடனமான மறுநாள் இரவு கைதான யாழ்ப்பாணக் காளை அய்யாத்துரை இந்திரராஜாவுக்கு வயது பதினென்பதுதான். சாவகச்சேரி காவல் நிலையத்தில் அடித்து நொறுக்கப்பட்டு— யாழ்ப்பாணம் சிறையில் ரிமாண்ட் வைக்கப்பட்டார். 21—7—79 அன்று அங்கேயே இறந்தார். அவர் உடலில் இருந்த காயக்குறிகள்33க்கு மேல்.

இந்த அறுவர் மட்டுமோ இன்னும் பலர்— போலீஸ் சித்திரவதைக் கொடுமைகளால் மருத்துவ மனை

உல்லாசப் பயணம் நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில்தான் அவர்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது மீளா உறக்கத்தில்ஆழ்ந்திருக்கிறார்கள்.

ராசதுரையின் சுற்றுப் பயணம் தினத்தந்தியிலும் கூடச் செய்தியாக வருகிறது.

ஆனால் இன்பமும் அவரது மைத்துனரும் களபலியாகி விட்ட செய்தியை காரணத்தோடு வெளியிடக் கூட ஈழத் தமிழரின் ஏடாம் சுதந்தரனுக்கு அனுமதியில்லை. இன்பமும் அவரது மைத்துனரும் மறைந்தனர் என்ற ஒரு வாக்கியச் செய்தியை வெளியிட மட்டுமே சுதந்தரனை அனுமதித்திருக்கிறது தணிக்கை.

றைய தினமே கைது செய்யப்பட்டு அதே காவல் நிலை நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்ட சுன்னாகம் பாசி ஜெயேந்திரன் என்ற மூர்த்தி பார்த்திருக்கிறார்.

இப்படிச் சில பலரைக் கொல்வதன்மூலம், தமிழர் விடுதலை உணர்ச்சியை அடக்கிவிடலாம் என்று கருதும் சிங்கள அரசாங்கம், வெள்ளை ஏகாதிபத்தியத்தைவிடப் பெரியதில்லை. முப்பது லட்சம் தமிழர்களும் ஒருநாள் பொங்கி எழத்தான் போகின்றனர். அன்று இந்தச் சாவுகளுக்கு கணக்குத் தீர்க்கத்தான் போகின்றனர்.

(சிங்களவர்களின் செய்தித் தணிக்கைக்குத் தப்பி வந்த தகவல்கள் இவை.)

www.padippakam.com
படிப்பகம்